## ‘தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்’ உறுதிமொழியேற்க - கூட்டங்களில்

# கொள்கைப் படையாகத் திரண்ட மக்களுக்கு நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!
## ‘மக்கள் திரள்’ படங்கள் இணைத்து பெருமிதம்!

**சென்னை, செப்.24-**

**“தமிழ்நாடு முழுவதும் 72 கழக மாவட்டங்களிலும் ‘தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டோம்’ என உறுதிமொழி யேற்க - கொள்கைப் படையாய்த் திரண்ட மக்களுக்கு என் மனமார்ந்த நன்றி” என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் மக்கள் திரண்ட பெருங்கூட்டத்தின் புகைப்படங்களையும் இணைத்து பெருமிதத்துடன் பதிவிட்டுள்ளார்.**

இதுபற்றிய விவரம் வருமாறு :-

தமிழ்நாட்டின் மண் – மொழி – மானம் காக்க கழகத் தலைவர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ இயக்கத்தில் இணைந்துள்ள ஒரு கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்களால் முன்மொழியப்பட்டுள்ள “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” என்று கடந்த 15 ஆம் தேதி அன்று பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் அன்று தமிழ்நாடு முழுவதும் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாக தலைமைக் கழகம் கடந்த 19ஆம் தேதி அன்று ஒரு முக்கிய அறிவிப்புகளை அறிவித்தது. அந்த அறிவிப்பு:-

“தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” என்ற தீர்மான ஏற்புக் கூட்டங்கள் செப்டம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் கழக மாவட்ட வாரியாக அட்டவணைப்படி நடத்திட வேண்டும் என்று அறிவித்திருந்தது.

அதன்படி கடந்த 20.9.2025 சனிக்கிழமை அன்று “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்”, ‘ஓரணியில் தமிழ்நாடு’ தீர்மான ஏற்புக் கூட்டங்கள், 39 இடங்களின் கூட்டங்கள் - நடைபெறும் மாவட்டங்களை அறிவித்தவுடன் உரையாற்றுவோர் பெயர்களையும் அறிவித்தது.

அதேபோல் 21.9.2025 - ஞாயிற்றுக்கிழமை அன்று 35 இடங்களில் நடைபெறும் மாவட்டங்களையும் உரையாற்று வோர் பெயர்களையும் அறிவித்து இருந்தது.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் இக்கூட்டங்கள் மிகவும் சிறப்புடன் நடைபெற்றன. இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு கழக கொள்கை வீரர்களின் சொற்பொழிவை கேட்டனர்.

இந்த எழுச்சிமிகு கூட்டங்கள் நடைபெற்றது குறித்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில்,

**‘‘கடந்த இரு நாட்களில், மாநிலம் முழுவதும் 72 கழக மாவட்டங்களிலும், ‘‘தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டோம்’’ என உறுதிமொழியேற்க கொள்கைப் படையாய்த் திரண்ட மக்களுக்கு என் மனம்நிறைந்த நன்றி!’’**

**‘‘ஓரணியில் தமிழ்நாடு’’**

- என்று குறிப்பிட்டுள்ளார்.

- மேலும் முதல்வர் அவர்கள் கூட்டங்கள் நடைபெற்ற நகரங்களில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் புகைப்படங்களை யும் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அப்படங்களை இங்கே வெளியிட்டுள்ளோம்.


காஞ்சிபுரம்


கிருஷ்ணகிரி


விருதுநகர்


அரியலூர்


ஆர்.கே.நகர்


விருத்தாச்சலம்


திருச்சி


திருவாரூர்